# இரண்டாம் மொழி

# தமிழ்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 10

**(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**


தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

# இரண்டாம் மொழி

# தமிழ்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 10

**(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் **: www.nie.lk**
மின்னஞ்சல் **: info@nie.lk**

இரண்டாம் மொழி - தமிழ்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் - 10

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2015
தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா.

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 1, 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

# அறிமுகம்

பல்லின, பன்மொழிப் பண்பாட்டுச் சூழலில் வாழும் மக்கள் தமக்கிடையே புரிந்துணர்வு, ஐக்கியம் என்பவற்றை வளர்த்துக் கொள்ளவும் பரந்த அறிவு, மனப்பாங்கு என்பவற்றை ஏற்படுத்திக் கொள்ளவும் மாற்றுச் சமூகங்களின் மொழிகளை அறிந்திருத்தல் பயன் மிக்கதாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்களமொழி பேசும் சமூகத்தவர் தமிழ் மொழியையும் தமிழ்மொழி பேசும் சமூகத்தவர் சிங்கள மொழியையும் கற்பது இரு சமூகங்களிடையிலும் புரிந்துணர்வையும் உறவையும் ஏற்படுத்த வழி செய்யும் பயன்மிக்க நடவடிக்கையாகும்.

அவ்வகையில் முதன்மொழியாகிய தாய்மொழி (சிங்களம் / தமிழ்), சர்வதேச மொழியாகிய ஆங்கிலம் என்பவற்றுடன் இரண்டாம் மொழியையும் (தமிழ் / சிங்களம்) கற்றல் - கற்பித்தல் அவசியம் என்பது தேசிய கல்விக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட தரம் - 10 க்கான "இரண்டாம் மொழி - தமிழ்" பாடம் 2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

மேலும், இப்பாடத்திட்டத்தில் மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்பவற்றில் தரம் - 10 மாணவர்கள் அடைய வேண்டிய தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு, அவற்றுக்கான தேர்ச்சி மட்டங்கள் படிமுறைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. ஆசிரியர், தேர்ச்சி மட்டங்களின் படிமுறை வளர்ச்சியைக் கருத்திற் கொண்டும் பொருத்தமான கற்பித்தல் உத்திகளைக் கையாண்டும் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். அத்தோடு தாம் கற்பிக்கும் வகுப்புக்கு முற்பட்ட வகுப்புகளின் பாடத்திட்டம் பற்றி அறிந்திருக்க வேண்டும். அது மட்டுமின்றி, ஒவ்வொரு வகுப்புக்கும் கற்பிக்கும்போதும் முன்னைய வகுப்புப் பாடத்திட்டங்களுடன் தொடர்புபட்ட விடயங்களை மீட்டுப் பார்ப்பதும் அவசியமாகும்.

அதற்கமைய "இரண்டாம் மொழி - தமிழ்" பாடத்தின் குறிக்கோள்களை நிறைவு செய்தவாறு தேர்ச்சிமிக்க இளஞ் சந்ததியினரை உருவாக்குவதற்கு வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இந்நூல் தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**பணிப்பாளர்**
**தமிழ்மொழித்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**

## வளப் பங்களிப்பு

**ஆலோசனை** : பேராசிரியர் டபிள்யு. எம். அபேயரத்ன பண்டார,
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

வண கலாநிதி மாபுள்கொட சுமணரதன தேரர்,
பிரதி பணிப்பாளர் நாயகம், மொழிகள் மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட விடய ஆலோசனை :**

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,
கலாநிதி உ.நவரத்னம்
நிபுணத்துவ ஆலோசகர், ஜி.ஐ.இஸட்
செல்வி வ.விஜயலெட்சுமி
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை.

**இணைப்பாக்கம் :**

திருமதி நா.சீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை.
திரு மு.தயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை.

**வளப்பங்களிப்பு :**

திருமதி ப. சபாநாதன்
ஆசிரியர், மேமா/லலித் அத்துலத்முதலி கல்லூரி, கல்கிஸ்சை
திரு ஆர். சதாத்
ஆசிரியர், தி/தாருல் உலூம் ம.வி. கிண்ணியா.
திரு சி. காண்டீபன்
அபிவிருத்தி உதவியாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
செல்வி ஜே. பாலறஞ்சனி
மாகாணக் கல்வி அலுவலகம், மேல் மாகாணம்.
திரு பொ. அசோக்குமார்
ஆசிரியர், மமா/நு/வ/டலோஸ் மகா வித்தியாலயம், உடப்புசல்லாவ.
திரு க.சிவராஜ்
ஆசிரியர், மமா/நு/வ/மடுல்ல மகா வித்தியாலயம், உடப்புசல்லாவ.
செல்வி வே. மாக்கிறித்தா
ஆசிரியர், இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டிய.

**கணினிப்பதிப்பு :**

திருமதி ஷீலா ஸ்ரீதரன்

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் கலைத்திட்டத்தில் தொகுதிப் பாடங்களுள் ஒன்றாக இருந்துவரும் இரண்டாம் மொழி - தமிழ்ப் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதேவிதமாக நடைமுறைப்படுத்தப்படும். 6-11 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு இரண்டு பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10-11 ஆம் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

6-11 ஆந்தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி பிரதானமாக கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்னும் நான்கு தேர்ச்சிகளின் கீழ் தரம் 10 க்கான இரண்டாம் மொழி - தமிழ்ப் பாடக்கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

'இரண்டாம் மொழி - தமிழ்' பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும்போது பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. இவ் ஆசிரியர் வழிகாட்டியில் உள்ள **சொற்களஞ்சியம்** என்னும் பகுதி ஆசிரியர் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை சிறப்பாக மேற்கொள்ள உதவியாக அமையும். இவ்வாறு செயற்பாடு சார்ந்த கற்றல் சந்தர்ப்பங்களைத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் மாணவர் பாடங்களைப் பயில்வதற்கு வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**நூலாக்கக் குழு**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| 02 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| 03 | அறிமுகம் | v |
| 04 | வளப்பங்களிப்பு | vi |
| 05 | ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் | vii |
| 06 | பாடத்திட்டம் | viii |
| 07 | கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | |
| | 1.0 கேட்டல் | 01 - 12 |
| | 2.0 பேச்சு | 13 - 25 |
| | 3.0 வாசிப்பு | 26 - 33 |
| | 4.0 எழுத்து | 34 - 45 |

# பாடத்திட்டம்

## கேட்டல்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுகளுக்குச் செவிமடுத்து அவற்றை இனங்கண்டு துலங்குவார். | 1.1 பண்பான உரையாடல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | • கிராம அதிகாரியுடனான உரையாடல்<br>உம்: தயவுசெய்து, நன்றி, ...... | • தெளிவான உரையாடலைச் செவிமடுத்து அதிகமான சொற்களை விளங்கித் துலங்குவார். | 02 |
| | 1.2 அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | • வைத்தியரின் அறிவுறுத்தல்<br>உ-ம்: இன்று சாப்பிட வேண்டாம். | • அறிவுறுத்தல்களைக் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 02 |
| | 1.3 வழிநடத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | • தபால் நிலையம்<br>- தபால் நிலையத்திற்குச் செல்லும் வழி | • தகவல்களைக் கொண்ட வழிநடத்தல்களை செவிமடுத்து, அதற்கேற்பச் செயற்படுவார். | 02 |
| | 1.4 அறிவித்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | • புகையிரத நிலையத்தில் அறிவித்தல் | • ஒலிபெருக்கி மூலம் வழங்கப்படும் அறிவித்தல்களைக் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 02 |
| | 1.5 வானொலி, ஒலிநாடா ஒலிபரப்புகளைச் செவிமடுத்து இரசிப்பார். | • இலகுவான பாடல் தீராத விளையாட்டுப் பிள்ளை | • நிகழ்ச்சிகளையும் தகவல்களையும் செவிமடுத்து, இரசனையை வெளிப்படுத்துவார். | 02 |

## பேச்சு

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0 பொதுவான விடயங்களில் வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார். | 2.1 அறிவுறுத்தல்களை விளங்கிச் செயற்படுவார். | • கணினிக் கூடத்தில் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் | • நாளாந்தத் தேவைகள், விபரங்கள் உள்ளடங்கிய அறிவுறுத்தல்களை ஏற்று உரையாட முன்வருவார். | 03 |
| | 2.2 வழிநடத்தல்களைப் பின்பற்றி உரையாட முன்வருவார். | • தபால் நிலையத்திற்குச் செல்லும் வழி | • தேவைகளுக்கு ஏற்ப பொருத்தமான வழிநடத்தல்களுக்கு அமைய உரையாட முன்வருவார். | 03 |
| | 2.3 நட்புரீதியாக உரையாட முன்வருவார். | • தொலைபேசி உரையாடல் | • நட்புடனான உரையாடலை வளர்த்துச் செல்வார். | 03 |
| | 2.4 தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக உரையாடுவார். | • எனது ஆசிரியர்<br>- உரையாடல்<br>- முகப் புத்தகம்<br>- மின்னஞ்சல்<br>- குறுஞ்செய்தி மூலம் உரையாடல் | • தகவல்களைப் பரிமாறுவதற்கு நட்புரீதியாக இணைந்து உரையாடுவார். | 03 |
| | 2.5 கொடுக்கல் வாங்கல் களில் ஈடுபடுவதற்காக உரையாடுவார். | • சந்தையில் உரையாடல் | • கொடுக்கல் வாங்கலில் சந்தர்ப்பங்களுக்கேற்ப உரையாடல் | 03 |
| | 2.6 சிறிய வாக்கியங்களைப் பயன்படுத்தி உரையாடுவதற்கு முன்வருவார். | • மாணவர் ஒருவரை அறிவிப்புச் செய்வதற்குத் தெரிவு செய்யும் சந்தர்ப்பம் | • தனிப்பட்ட தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் அறிவுறுத்தல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் உரையாட முன்வருவார். | 03 |

## வாசிப்பு

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 3.0 நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்கள், சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து வாசிப்பார். | 3.1 கடிதங்களையும் வேறு படிவங்களையும் விளங்கி வாசிப்பார். | • நண்பர் ஒருவரின் கடிதம் | • கடிதங்களில் வரும் முக்கிய விடயங்களை அறிந்து வாசிப்பார். | 04 |
| | 3.2 இலக்கியங்களை விளங்கி வாசிப்பார். | • நான் விரும்பும் பெரியார் | • இலக்கியங்களை நன்றாக விளங்கி வாசிப்பார். | 04 |
| | 3.3 அறிவுறுத்தல்களை விளங்கி வாசிப்பார். | • வழிபாட்டுத் தலத்தில் உள்ள அறிவுறுத்தல்கள் | • தெளிவான அறிவுறுத்தல் களை விளங்கி வாசித்துத் துலங்குவார். | 04 |
| | 3.4 கட்புல, செவிப்புல சாதனங்கள் மூலம் தகவல்களைப் பார்த்து விளங்கி வாசிப்பார். | • தமிழ்ப் பத்திரிகை களில் வரும் விளையாட்டுச் செய்திகள் | • வெவ்வேறு ஊடகத் தகவல்களைப் பார்த்து விளங்கி வாசிப்பார். | 04 |

## எழுத்து

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 4.0 நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்கள், சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து எழுதுவார். | 4.1 விபரங்கள் உள்ளடங்கிய பந்திகளை எழுதுவார். | • நான் விரும்பும் பெரியார் | • பரிச்சயமான தகவல்களில் பொருத்தமான சொற்றொடர்களை எழுதுவார். | 03 |
| | 4.2 ஆக்கபூர்வமான பந்திகளை எழுதுவார். | • நான் சென்ற சுற்றுலா<br>• அழைப்பிதழ் | • ஆக்கபூர்வமான பந்தியினை சுயமாக எழுதுவார். | 03 |
| | 4.3 கடிதங்களை எழுதுவார். | • வெளிநாட்டிலுள்ள சகோதரனுக்குச் சிறிய கடிதம் (உறவுமுறை) | • தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக கடிதங்களை எழுதுவார். | 04 |
| | 4.4 தகவல்கள் உள்ளடங்கிய சொற்றொடர்களை, பந்திகளை எழுதுவார். | • குப்பைகளை அகற்றுவது தொடர்பான அறிவித்தல்கள் / துண்டுப் பிரசுரம் | • பல்வேறு சிறிய பந்திகளை எழுதுவார். | 04 |
| | 4.5 விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்துவார். | • பயிற்சி நெறி ஒன்றிற்கான விண்ணப்பப் படிவம் | • சிறிய விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தி எழுதுவார். | 04 |

# கற்றல் கற்பித்தல் செயலொழுங்கின் ஆலோசனைகள்

**தேர்ச்சி 1.0** : நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களுக்கு செவிமடுத்து அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : பண்பான உரையாடல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : கிராம சேவையாளரைச் சந்தித்தல்
- உரையாடல்

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- உரையாடும்போது பண்புடன் செவிமடுப்பார்.
- புதிய சொற்களை அறிந்து கூறுவார்.
- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான உரையாடல்களில் ஈடுபட முன்வருவார்.
- நாளாந்தத் தேவைகளுக்காக பொருத்தமான சொற்களைப் பயன்படுத்த முனைவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- தயாரிக்கப்பட்ட ஒலிப்பதிவு உரையாடல்களை மீண்டும் மீண்டும் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- உரையாடல்களில் உள்ள புதிய சொற்களை உபயோகப்படுத்த உதவி செய்யுங்கள்.
- வகுப்பறையில் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பாத்திரமேற்று உரையாட செயற்பாடுகளை ஒழுங்கமையுங்கள்.
- எல்லா மாணவர்களும் பங்குபற்றிச் செயற்பட சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

### முதன்மைப் பதங்கள்/ எண்ணக்கருக்கள்

| | |
|---|---|
| காலம் - කාලය | எங்கே - කොහෙ ද? |
| என்ன - කුමක් ද / මොකක් ද? | சான்றிதழ் - සහතික |
| செய்கிறீர்கள் - කරන්නේ | வசிக்கிறீர்கள் - වාසය කරන්නේ |
| கிராம சேவையாளர் - ග්‍රාම නිලධාරි | வணக்கம் - ආයුබෝවන් |
| வசிக்கிறேன் - වාසය කරමි | நன்றி - ස්තුතියි |
| உட்காருங்கள் - වාඩිවෙන්න | வேலை - වැඩ |
| தயவு செய்து – කරුණාකර | உள்ளே - ඇතුලේ |
| வாருங்கள்– එන්න | எவ்வளவு? - කීය ද? |

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**පුහුණුව සඳහා යොදා ගන්න**

| | |
|---|---|
| எவ்வளவு | කොපමණ |
| காலம் | කාලයක් |
| வசிக்கிறேன் | ජීවත් වෙමි / වාසය කරමි |
| வருடங்கள் | අවුරුදු |
| தயவு செய்து | කරුණාකර |
| வாருங்கள் | පැමිණෙන්න / එන්න |
| உட்காருங்கள் | වාඩිවෙන්න |

எவ்வளவு காலம் வசிக்கிறீர்கள்?

කොපමණ කාලයක් ජීවත් වෙනවා ද? / වාසය කරන්නෙහිද?

என்ன செய்கிறீர்கள்?

මොනව ද කරන්නේ?

பத்து வருடங்களாக வசிக்கிறேன்.

අවුරුදු දහයක් ජීවත් වෙනවා

கதிரையில் உட்காருங்கள்.

පුටුවේ වාඩිවෙන්න

தயவு செய்து வாருங்கள்.

කරුණාකර පැමිණෙන්න

உள்ளே வாருங்கள்.

ඇතුළට එන්න

## கிராம சேவையாளருடனான உரையாடல்.

| | |
|---|---|
| கிராமவாசி | : வணக்கம். |
| கிராமசேவையாளர் | : வணக்கம், உள்ளே வாருங்கள். |
| கிராமவாசி | : எனக்கு வதிவிடச் சான்றிதழ் தேவை. தயவுசெய்து தர முடியுமா? |
| கிராமசேவையாளர் | : என்ன தேவைக்காக? |
| கிராமவாசி | : நேர்முகப் பரீட்சைக்கு. |
| கிராமசேவையாளர் | : தேர்தல் இடாப்பு இலக்கம் தெரியுமா? |
| கிராமவாசி | : தெரியும். |
| கிராமசேவையாளர் | : எவ்வளவு காலம் இங்கே இருக்கிறீர்கள்? |
| கிராமவாசி | : பத்து வருடங்கள் |
| கிராமசேவையாளர் | : கொஞ்ச நேரம் இருங்கள். தருகிறேன். |
| கிராமவாசி | : நன்றி ஐயா. |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- வாக்கிய அட்டைகள்
- ஒலிப்பதிவு நாடா

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- உரையாடுவதற்காகச் செவிமடுப்பார்.
- உரையாடலை அவதானமாகச் செவிமடுப்பார்.
- உரையாடலில் வரும் புதிய சொற்களை அறிந்து பயன்படுத்துவார்.
- இலகுவான சொற்களைப் பயன்படுத்தி ஏனையோருடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்வார்.

**தேர்ச்சி 1.0** : நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களுக்கு செவிமடுத்து அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : வைத்தியரின் அறிவுறுத்தல்

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.
- அறிவுறுத்தல்களை விளங்கிச் செயற்படுவார்.
- உள்ளடக்கத்தில் உள்ள புதிய சொற்களை அறிந்து கூறுவார்.
- வேறு அறிவுறுத்தல்களை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுவார்.

## பாடத்தைத் திட்டமிடுல் தொடர்பான ஆலோசனைகள்

- நாளாந்த வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- அறிவுறுத்தல்களை மீண்டும் மீண்டும் கேட்கச் செய்யுங்கள்.
- மாணவர் அவதானமாகச் செவிமடுத்துத் துலங்க வழிகாட்டுங்கள்.
- இலகுவான அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துப் பொருளை விளங்கித் துலங்க உதவுங்கள்.
- வேறு அறிவுறுத்தல்களைச் செவிமடுக்கும் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள்/எண்ணக்கருக்கள்

| | |
|---|---|
| சாப்பாட்டிற்கு - කෑමට | மருந்து - බෙහෙත් |
| பின்னர் - පසුව | மாத்திரை/குளிசை - බෙහෙත් පෙත්ත |
| ஓய்வு - විවේකය | எடுங்கள் - ගන්න |
| முன்னர் - පෙර | நன்றாக - හොඳට |

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.
## පුහුණුව සඳහා යොදා ගන්න

நன்றாக ஓய்வெடுங்கள்.

හොඳින් විවේක ගන්න

சாப்பாட்டிற்குப் பின்னர் மருந்து குடியுங்கள்.

කෑමෙන් පසුව බෙහෙත් බොන්න

நன்றாக மூச்செடுங்கள்.

හොඳින් හුස්ම ගන්න

நேராகச் செல்லுங்கள்.

කෙලින්ම යන්න

**உரையாடல்**

வைத்தியர் : என்ன வருத்தம்?

நோயாளி : சரியான காய்ச்சல் ஐயா.

வைத்தியர்: நாக்கை நீட்டுங்கள். எத்தனை நாளாய்க் காய்ச்சல்? (பரிசோதித்தல்)

நோயாளி : இரண்டு நாட்களாய் விட்டு விட்டுக் காய்ச்சல்.

வைத்தியர் : இந்தக் குளிசையை ஒரு நாளைக்கு மூன்று தடவை எடுங்கள்.

நோயாளி : சாப்பாட்டிற்கு முன்னரா? சாப்பாட்டிற்குப் பின்னரா?

வைத்தியர் : சாப்பாட்டிற்குப் பின்னர். சரி, நன்றாக ஓய்வு எடுங்கள்.

நோயாளி : நன்றி ஐயா.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- சொல்லட்டைகள்
- வீதிச் சமிக்ஞைகள் (பொருத்தமானவை)
- பாடநூல்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- அறிவுறுத்தல்களை ஆர்வத்துடன் செவிமடுப்பார்.
- அறிவுறுத்தல்களை விளங்கித் துலங்குவார்.
- அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நடப்பார்.
- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான அறிவுறுத்தல்களை வழங்குவார்.

**தேர்ச்சி 1.0** : நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களுக்குச் செவிமடுத்து அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : வழிநடத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : தபால் நிலையத்திற்குச் செல்லும் வழி

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- வழிநடத்தல்கள் தொடர்பான விடயங்களைச் செவிமடுப்பார்.
- திரட்டிய தகவல்களைச் செவிமடுத்து அதற்கேற்ப துலங்குவார்.
- வேறு சந்தர்ப்பங்களில் பொருத்தமான வழிநடத்தல்களுக்கேற்ப துலங்குவார்.
- இலகுவான சொற்களைப் பயன்படுத்தி வேறு சந்தர்ப்பங்களில் பொருத்தமான வழிநடத்தல்களை மேற்கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- பாடப்பகுதியை அனைத்து மாணவர்களுக்கும் வாசித்துக் காட்டுங்கள்.
- செவிமடுத்துச் செயற்படுவதற்காக தகவல்களை வழங்குங்கள்.
- வழிநடத்தல்களை மீண்டும் மீண்டும் கேட்கச் செய்யுங்கள்.
- பாடப்பகுதியில் உள்ள சொற்களஞ்சியத்தை அவதானித்து வழிநடத்தல்களுக்கான சொற்களை அறிவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்களுக்குக் குழுவாகவும் தனியாகவும் பாடப்பகுதியில் வரும் பந்திகளை வாசித்துக் காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வகுப்பறையில் மாணவர்கள் முன்வந்து உரையாடலை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் ஒருவருக்கொருவர் வழிநடத்தல்களை மேற்கொள்ள உதவுங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

## முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்

தபால் நிலையம் - තැපැල් කාර්යාලය

போவது எப்படி? - යන්නේ කොහොම ද?

திரும்புங்கள் - හැරෙන්න

வலது பக்கம் - දකුනු පැත්ත

எங்கே? - කොහේ ද?

வழி - පාර

இடது பக்கம் - වම් පැත්ත

தபாற்பெட்டி - තැපැල් පෙට්ටිය

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

## පුහුණුව සඳහා යොදා ගන්න

நேராகச் செல்லுங்கள்

කෙලින්ම යන්න

பாதையைக் கடவுங்கள்

පාර මාරුවෙන්න

வலது பக்கம் திரும்புங்கள்

දකුණට හැරෙන්න

## தரவிருத்தி உள்ளீடுகள்

- படங்கள்
- சொல்லட்டைகள்
- தபால் நிலையத்தில் காணக்கூடிய படங்கள்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- வழிநடத்தல்களுக்குப் பயன்படுத்தும் சொற்களை சரியாக செவிமடுத்துத் துலங்குவார்.
- அச்சொற்களைப் பயன்படுத்துவார்.
- வழிநடத்தல்களில் வருகின்ற இலகுவான வாக்கியங்களைக் கூறுவார்.
- வழிநடத்தல்களை விளங்கிச் செயற்படுவார்.

**தேர்ச்சி 1.0** : நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களுக்குச் செவிமடுத்து அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : அறிவித்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : புகையிரத நிலையத்தில் அறிவித்தல்கள்

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :

- அறிவித்தல்களை அவதானமாகச் செவிமடுப்பார்.
- அறிவித்தல்களை ஆர்வத்துடன் கேட்க முன்வருவார்.
- பொது இடங்களில் விடுக்கப்படும் அறிவித்தல்களைக் கேட்டுச் செயற்படுவார்.
- வேறு அறிவித்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்**

- சிறிய அறிவித்தல்களைக் காட்சிப்படுத்தல் / ஒலிக்கச் செய்யுங்கள்.
- அறிவித்தல்களைச் செய்ய ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்.
- மாணவர்கள் அறிவித்தல்களைச் செவிமடுத்து விளங்கித் துலங்க உதவுங்கள்.
- அறிவித்தல்கள் செய்ய முன்வரும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**முதன்மைப் பதங்கள்/ எண்ணக்கருக்கள்**

| | |
|---|---|
| புகையிரத நிலையம் - දුම්රිය ස්ථානය | பொருட்கள் - භාණ්ඩ |
| கவனம் - අවධානමෙන් | பயணிகள் - මගීන් |
| வைத்திருங்கள் - තබා ගන්න | உடைமை - අයත් දේ |
| மேடை - වේදිකාව | பயணச் சீட்டு - ප්‍රවේශ පත්‍ර |

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**පුහුණුව සඳහා යොදා ගන්න**

பயணிகளின் கவனத்திற்கு

මගීන්ගේ අවධානය පිණිසයි

இன்னும் சிறிது நேரத்தில் புறப்படும்

තව ස්වල්ප වේලාවකින් පිටත්වේ

இப்பொழுது பயணச் சீட்டுகள் விநியோகிக்கப்படும்

දැන් ප්‍රවේශ පත්‍ර නිකුත් කෙරේ

## அறிவித்தல்

இது கோட்டை புகையிரத நிலையம். இரண்டாம் மேடையில் தரித்து நிற்கும் யாழ்தேவி கடுகதிப் புகையிரதம் இன்னும் 10 நிமிடத்தில் பளை நோக்கிப் புறப்படும். இது கம்பஹா, குருநாகல், மாகோ, வவுனியா, கிளிநொச்சி புகையிரத நிலையங்களில் தரித்துச் செல்லும்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

அறிவித்தல்கள் எழுதிய சொல்லட்டைகள், பாடநூல், ஒலிநாடா

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- காட்சிப்படுத்தப்படும் /ஒலிபரப்பப்படும் அறிவித்தல்களைப் பார்த்து / செவிமடுத்துத் துலங்குவார்.
- அறிவித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள ஆர்வமாக முன்வருவார்.
- அறிவித்தலைச் செவிமடுத்து முக்கியமான சொற்களைக் கூறுவார்.
- அறிந்த சொற்களைப் பயன்படுத்தி அறிவித்தல்களைக் கூறுவார்.

**தேர்ச்சி 1.0** : நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களுக்கு செவிமடுத்து அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.5** : வானொலி ஒலிநாடா, ஒலிபரப்புகளை செவிமடுத்து இரசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தீராத விளையாட்டுப் பிள்ளை

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- ஒலிபரப்பப்படும் பாடலை அவதானமாகச் செவிமடுப்பார்.
- பாடலுக்கேற்றவகையில் தாளம் போடுவார்.
- பாடலைப் பாடுவார். (தனியாகவும் குழுவாகவும்)
- பொருளை விளங்கிக் கூறுவார்.
- வேறு பாடலைக் கேட்க ஆர்வத்தை வெளிப்படுத்துவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- பாடல் அடங்கிய ஒலிநாடாவை அல்லது இறுவட்டைக் கேட்கச் செய்யுங்கள்.
- பாடலை மீண்டும் மீண்டும் கேட்கச் செய்யுங்கள்.
- ஆசிரியர் பாடலை தெளிவான உச்சரிப்புடன் பாடிக் காட்டுங்கள்.
- தனியாகவும் குழுவாகவும் பாடலை பாடுவதற்கு உதவுங்கள்.
- மாணவர் பங்கேற்று தாளம் போட்டுப் பாடச் செய்யுங்கள்.
- பாடலின் பொருளை அறிந்து பாட உதவுங்கள்.
- பாடல்களை இசையோடு பாட வழிப்படுத்துங்கள்.
- வேறு பாடலைக் கேட்கவும் இரசிக்கவும் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள்/ எண்ணக்கரு

விளையாட்டுப் பிள்ளை - සුරතල් ළමයා

பெண்கள் - ගැහැණු

கடித்து - හපලා

கொண்டு வருவான் - රැගෙන එයි

தட்டிப் பறிப்பான் - උදුර ගනියි

தெரு මාවත/ වීදිය

தொல்லை - කරදර

கொடுப்பான் - දෙයි

பின்னால் - පසුව

பழம் - පළතුරු

## தரவிருத்தி உள்ளீடுகள்

பாடநூல், இறுவட்டு, ஒலிநாடா

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- புதிய சொற்களை அறிந்து கூறுவார்.
- பாடலை இரசித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்.
- பாடலைச் செவிமடுத்துப் பாடுவார்.
- குழுவாகவும் தனியாகவும் பாடுவார்.
- வேறு பாடல்களைப் பாடுவதற்கு விருப்பம் தெரிவிப்பார்.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்களில் வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : அறிவுறுத்தல்களை விளங்கிச் செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம்** : உரையாடல்
- கணினிக் கூடத்தில் வழங்கப்படும் அறிவுறுத்தல்

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- அறிவுறுத்தல்கள் வழங்குவதற்குப் பயன்படுத்தும் சொற்களை அறிந்து கூறுவார்.
- அறிவுறுத்தல்களை விளங்கி அதற்கேற்பத் துலங்குவார்.
- வழங்கப்படும் வெவ்வேறு அறிவுறுத்தல்களை விளங்கிச் செயற்படுவார்.
- வெவ்வேறு சந்தர்ப்பங்களுக்கேற்ப தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கும் ஆற்றலைப் பெறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- பாடப்பகுதியில் வரும் உரையாடல்களில் உள்ள அறிவுறுத்தல்களை வாசித்து எல்லா மாணவர்களையும் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- மாணவர்களை உரையாடலை வாசிக்கச் செய்து மீண்டும் மீண்டும் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- உரையாடலில் உள்ள அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துச் செயற்பட எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தேவையான அறிவுறுத்தல்களைப் பயன்படுத்தி உரையாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இடர்ப்படும் சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்கு உதவுங்கள்.

## முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்.

கணினி - පරිගණකය

முகப்புத்தகம் - මුහුණු පොත

மின்இணைப்பு - විදුලි සම්බන්ධතාව

திரை - තිරය

போங்கள் - යන්න

துண்டியுங்கள் -කපන්න/ විසන්ධි කරන්න

இணைய இணைப்பு - අන්තර් ජාලය

இயக்குங்கள் - පරිහරනය කරන්න

வேண்டாம் - එපා

மின்சாரம் - විදුලිය

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

## පුහුණුව සඳහා යොදා ගන්න

மின்னிணைப்பை ஏற்படுத்துங்கள்.

විදුලිය සම්බන්ධ කරන්න.

மின்னிணைப்பைத் துண்டியுங்கள்.

විදුලිය විසන්ධි කරන්න.

இணையத் தளத்திற்குள் பிரவேசியுங்கள்.

අන්තර්ජාලයට ප්‍රවේශ වන්න.

மின்னஞ்சலைப் பாருங்கள்.

විද්‍යුත් තැපැල බලන්න.

## தரவிருத்தி உள்ளீடுகள்

கணினி

படங்கள்

அறிவுறுத்தல்கள்

பாடநூல்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பாடப்பகுதியில் உள்ள புதிய சொற்களை அறிந்து கூறுவார்.
- பாடப் பகுதியில் உள்ள அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துச் செயற்படுவார்.
- அறிவுறுத்தல்களைத் தாமாக முன்வந்து கூறுவார்.
- ஏனையோருடன் உறவுகளை வளர்த்துச் செயற்படுவார்.
- இணையத்தின் ஊடாக தமிழில் புதிய அறிவுறுத்தல்களைத் தேடி அறிந்து கூறுவார்.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்களில் வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : வழிநடத்தல்களைப் பின்பற்றி உரையாட முன்வருவார்.

**விடய உள்ளடக்கம்** : உரையாடல்
- தபால் நிலையத்திற்குச் செல்லும் வழி

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- தபால் நிலையத்திற்குச் செல்லும் வழியைப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி வினவுவார்.
- பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி உரையாட முன்வருவார்.
- வழிநடத்தல்களுக்கேற்ப உரையாடலை வளர்த்துச் செல்வார்.
- இவ்வாறான வேறு சந்தர்ப்பங்களில் உரையாட முன்வருவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- மாதிரித் தபால் நிலையத்தை வடிவமையுங்கள்.
- தபால் நிலையத்திற்குச் செல்லும் பாதைகள் பற்றிய வழிநடத்தல்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- இவ் வழிநடத்தல்களின் துணையுடன் தபாலகத்திற்குச் செல்லும் வழியைக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- பொருத்தமான சொற்களை உபயோகித்து உரையாடலை மேற்கொள்ள உதவுங்கள்.
- பிரதேசத்தில் உள்ள தபாலகத்திற்குச் செல்லும் வழியைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

## முதன்மைப் பதங்கள்/ எண்ணக்கருக்கள்

| | | | |
|---|---|---|---|
| தபால் நிலையம் | - තැපැල් කාර්යාලය | எங்கே? - | කොහේ ද? |
| எப்படி? | - කොහොම ද? | வழி - | පාර |
| திரும்புங்கள் | - හැරෙන්න | இடது - | වම් |
| வலது | - දකුනු | நேராக - | කෙලින් |

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**පුහුණුව සඳහා යොද ගන්න**

| | |
|---|---|
| எங்கே உள்ளது? | කොහෙද තියෙන්නේ ? |
| எப்படிப் போகலாம்? | කොහොම ද යන්නේ? |
| எவ்வளவு தூரம்? | කොපමණ දූර ද? |

**தபால் நிலையத்திற்கு வழி கேட்டல்**

வழிப்போக்கர் : வணக்கம்.

இளைஞர் : வணக்கம் ஐயா.

வழிப்போக்கர் : எனக்கு உதவ முடியுமா?

இளைஞர் : நிச்சயமாக, சொல்லுங்கள் ஐயா.

வழிப்போக்கர் : தபால் நிலையத்திற்கு எப்படிப் போவது?

இளைஞர் : இங்கிருந்து நேராகப் போய் வலதுபக்கமாக திரும்புங்கள்.

வழிப்போக்கர் : பிறகு.....

இளைஞர் : முன்னால் சென்று இடப்பக்கமாகத் திரும்பினால் தபால் நிலையம் தெரியும்.

வழிப்போக்கர் : நன்றி. மீண்டும் சந்திப்போம்.

## தர உள்ளீடுகள்

வழிகாட்டும் சொல்லட்டைகள், பதாகைகள்,

திசை காட்டும் பதாகைகள், மாதிரித் தபாலகம்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி வினாக்களை வினவுவார்.
- வினவப்படும் வினாக்களுக்கு ஏற்ப விடைகளைக் கூறுவார்.
- சந்தர்ப்பத்திற்கேற்ப உரையாடலை மேற்கொள்வார்.
- சரியான முறையிலும் பொருத்தமான முறையிலும் வழிநடத்தல்களை மேற்கொள்வார்.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்களில் வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.3 : நட்புரீதியாக உரையாடுவதற்கு முன்வருவார்.

**விடய உள்ளடக்கம்** : தொலைபேசி உரையாடல்

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- பண்பாக உரையாடுவதற்குத் தேவையான சொற்களை அறிந்து கூறுவார்.
- அறிந்த சொற்களைக் கொண்டு பண்பாக உரையாடுவார்.
- தெரிந்த சொற்களைக் கொண்டு இருவரும் நட்புரீதியாக உரையாடுவார்.
- கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வார்.
- உரையாடலை வளர்த்துச் செல்வார்.

## பாடத்தைத் திட்டமிடுதற்கான ஆலோசனைகள்

- பாடப்பகுதியை எல்லா மாணவர்களும் செவிமடுக்கும் வகையில் வாசித்துக் காட்டுங்கள்.
- பாடப்பகுதியை வாசிப்பதற்கு எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- உரையாடலில் வரும் புதிய சொற்களை அறிந்து கொள்ள வழிகாட்டுங்கள். வகுப்பறையில் பாத்திரமேற்று தொலைபேசி உரையாடலைச் செய்வதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- இவ்வாறான வேறு சந்தர்ப்பங்களில் தொலைபேசி உரையாடலை மேற்கொள்ளும் ஆற்றலை வளர்க்க உதவுங்கள்.

## முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்

| | |
|---|---|
| யார் - කවු ද? | உதவி - උදව් |
| கதைக்கிறீர்கள் - කතා කරනවා | செய்ய முடியுமா? - කරන්න හැකි ද? |
| நான் - මම | என்ன? - මොනවා ද? |
| விடயம் - කාරණය | எப்போது? - කවදා ද? |
| எங்கே? - කොහේ ද? | யாரிடம்? - කා ළඟද? |

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**පුහුණුව සඳහා යොදා ගන්න**

| | |
|---|---|
| என்ன விஷயம்? | எப்போது வருவார்? |
| මොකක්ද කාරණය? | කවදාද එන්නේ? |
| எத்தனை மணிக்கு? | எங்கே சென்றார் / போனார்? |
| කීයට ද? | කොහෙද ගියේ ? |
| நீங்கள் யார்? | |
| ඔබ කවුද? | |

| | | |
|---|---|---|
| முடியும் | - | පුළුවන් |
| முடியாது | - | බැහැ |
| தெரியும் | - | දන්නවා |
| தெரியாது | - | දන්නෙ නැහැ |

**தொலைபேசி உரையாடல்**

| | | |
|---|---|---|
| சிவா | : | சதா இருக்கிறாரா? |
| சதாவின் அம்மா | : | இல்லை, கோவிலுக்குப் போய் விட்டார். நீங்கள் யார்? |
| சிவா | : | நான் சிவா. சங்கீத வகுப்பில் இருந்து கதைக்கிறேன். சதா எப்போது வருவார்? |
| சதாவின் அம்மா | : | என்ன விஷயம்? |
| சிவா | : | நாளைக்கு மேலதிக வகுப்பு இருக்கிறது. |
| சதாவின் அம்மா | : | என்ன வகுப்பு? எங்கே? |
| சிவா | : | கணித வகுப்பு. பாடசாலையில் இருக்கிறது. சதாவிடம் சொல்லுங்கள். |
| சதாவின் அம்மா | : | சரி சொல்கிறேன். |
| சிவா | : | சரி அம்மா. |
| சதாவின் அம்மா | : | நன்றி மகன். |

## தரவிருத்தி உள்ளீடுகள்

கணினி, படங்கள், சொல்லட்டைகள், பாடநூல்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- தொலைபேசி உரையாடலைச் செய்வதற்கு வேண்டிய பண்பான சொற்களை அறிந்து கூறுவார்.
- அறிந்து கொண்ட சொற்களைப் பயன்படுத்தி தொலைபேசி உரையாடலை மேற்கொள்வார்.
- நட்புடன் உரையாடுவார்.
- மகிழ்ச்சியாகவும் பண்பாகவும் தொலைபேசியில் உரையாடுவார்.
- இது போன்ற வேறு தொலைபேசி உரையாடல்களை மேற்கொள்வார்.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்களில் வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.4** : தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்காக உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்** : உரையாடல் - கணினிக் கூடம்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- மாணவர்கள் தாமாகவே முன்வந்து நவீன தொடர்பு சாதன முறைகள் பற்றிய தகவல்களைக் கூறுவார்.
- தகவல்களைப் பரிமாறிக்கொள்வார்.
- நட்புரீதியாக இணைந்து உரையாடுவார்.
- தொடர்பு சாதனங்களின் பயன்பாடு குறித்து ஆர்வத்துடன் தகவல்களைப் பரிமாறிக்கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- நவீன தொடர்பாடல் சாதனங்களின் படங்களைக் காட்சிப்படுத்துவதன் மூலம் தகவல் பரிமாற்றம் பற்றிய கலந்துரையாடலை ஆரம்பியுங்கள்.
- தொடர்பாடல் முறைகள் பற்றிய வினாக்களை வினாவுங்கள்.
- அவற்றின் பயன்பாடுகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- அவற்றின் தீமைகள் குறித்து நட்புடன் கலந்துரையாடுங்கள்.
- அவற்றைப் பாதுகாப்பாக உபயோகிக்கும் முறைகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்

| | | | |
|---|---|---|---|
| தொடர்பு சாதனங்கள் | - සන්නිවේදන මාධ්‍ය | மின்னஞ்சல் - | විද්‍යුත් තැපැල් |
| விரைவாக | - ඉක්මනින් | தொலைபேசி - | දූර කථනය |
| பாதுகாப்பு | - ආරක්ෂාව | அறிவு - | දැනුම |
| துஷ்பிரயோகம் | - අනිසි පරිහරනය | கவனம் - | අවදානම |
| குறுஞ்செய்தி | - කෙටි පණිවිඩය | சொல்லுங்கள் - | කියන්න |

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**පුහුණුව සඳහා යොදා ගන්න**

கணினியைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துங்கள்.

පරිගණකය ආරක්ෂිතව භාවිතා කරන්න

விரைவாக அனுப்புங்கள்.

සීඝ්‍රයෙන් යවන්න

தகவல்களைக் கணினியில் பதிவு செய்யுங்கள்.

තොරතුරු පරිගණික ගත කරන්න

பிரதி எடுங்கள்.

පිටපත ගන්න

| | | | |
|---|---|---|---|
| விரைவாக | மெதுவாக | கவனமாக | முறையாக |
| ඉක්මණින් | හෙමින් | ප්‍රවේශමෙන් | ක්‍රමවත්ව |
| சரியாக | தெளிவாக | பெரிதாக | சுருக்கமாக |
| නිවැරදිව | පැහැදිළිව | විශාලව | කෙටියෙන් |

## தரவிருத்தி உள்ளீடுகள்

கணினி, படங்கள், சொல்லட்டைகள், பாடநூல்

தொலைபேசி

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- நவீன தொடர்பாடற் சாதனங்களின் பெயர்களைக் கூறுவார்.
- நவீன தொடர்பாடல் முறைகளைப் பற்றி ஆர்வத்துடன் உரையாடுவார்.
- தொடர்பாடற் சாதனங்களின் பயன் குறித்த தகவல்களை ஆசிரியருடன் பகிர்ந்துகொள்வார்.
- நவீன தொடர்பு சாதனங்களின் பயன்பாட்டின் போது ஏற்படும் விளைவுகள் பற்றி நட்புடன் உரையாடுவார்.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்களில் வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.5** : நட்புரீதியாக உரையாடுவதற்கு முன்வருவார்.

**விடய உள்ளடக்கம்** : சந்தையில் உரையாடல்

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- இடம் சந்தர்ப்பத்திற்கேற்ப உரையாடுவார்.
- பிறர் கூறுவதை அவதானமாகக் கேட்டுக் கிரகித்து பொருத்தமாக உரையாடுவார்.
- சந்தை தொடர்பான தகவல்களைக் கூறுவார்.
- உரையாடலில் இடம்பெறும் சொற்களுக்குரிய பொருளை விளங்கிக் கூறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- சந்தை தொடர்பாக ஏற்கனவே அறிந்தவற்றைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர் இருவரை முன்வரச் செய்து உரையாடலை நிகழ்த்த வழிசெய்யுங்கள்.
- உச்சரிப்புத் தெளிவில் கவனம் செலுத்துங்கள்.
- ஏனையோரை அவதானித்துச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- செவிமடுத்தவற்றை வெளிப்படுத்தச் செய்யுங்கள்.
- உரையாடலில் இடம்பெற்ற சொற்களுக்குரிய சிங்களச் சொற்களைக் கூறுங்கள்.

## முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்

| | | | |
|---|---|---|---|
| சந்தை | - පොළ | பாவித்தல் - | පාවිච්චි කිරීම |
| தகவல்கள் | - තොරතුරු | மரக்கறி - | එළවළු |
| உரையாடும் | - කතාකරන | என்ன விலை? - | මිල කීයද? |
| பாத்திரம் | - චරිත | மிளகாய் - | මිරිස් |
| போல | - වාගේ | தாருங்கள் - | දෙන්න |
| வியாபாரி | - ව්‍යාපාරිකයා | தேங்காய் - | පොල් |

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**පුහුණුව සඳහා යොදා ගන්න**

| | | | | |
|---|---|---|---|---|
| விலை அதிகம் - | මිල වැඩියි | புதிய - | අලුත් | பழைய - පරණ |
| விலை குறைவு - | මිල අඩුයි | நல்ல - | හොඳ | கெட்ட - නරක |
| சரியான இலாபம் - | හරිම ලාභයි | சரியான நட்டம் - | හරිම පාඩුයි | |

## சந்தையில் உரையாடல்

கந்தன் : வணக்கம் முதலாளி.

முதலாளி : வணக்கம், நல்ல சுகம். உங்களுக்கு என்ன வேண்டும்?

கந்தன் : கத்திரிக்காய் என்ன விலை?

முதலாளி : அரை கிலோ 40 ரூபாய். நீங்கள் எடுங்கள். பார்த்துப் போடுறன்.

கந்தன் : அரை கிலோ கத்திரிக்காய், கால் கிலோ பயற்றங்காய், 250 கிராம் வெண்டைக்காய், 500 கிராம் பூசனிக்காய், 100 கிராம் பச்சை மிளகாய், இரண்டு தேசிக்காய், 500 கிராம் வெங்காயம் தாங்க. கறிவேப்பிலையும் போடுங்க.

முதலாளி : வேறு ஏதும் வேண்டுமா?

கந்தன் : போதும், போதும். மொத்தம் எவ்வளவு?

முதலாளி : முந்நூறு ரூபா

கந்தன் : இந்தாங்க. ஐந்நூறு ரூபா.

முதலாளி : இந்தாங்க மீதி இருநூறு ரூபா.

கந்தன் : நன்றி. நான் வருகிறேன்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

பாடநூல்கள், சந்தைக் காட்சி (இறுவட்டு) வாக்கிய அட்டைகள்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- குறித்த சொற்களை முறையாக உச்சரித்துக் கூறுவார்.
- மூன்று சொற்கள் கொண்ட வாக்கியங்களை கையாண்டு பேசுவார்.
- எழுவாய், பயனிலைகளை விளங்கி வாக்கிய இயைபுடன் பேசுவார்.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்களில் வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.6** : சிறிய வாக்கியங்களைப் பயன்படுத்தி உரையாடுவதற்கு முன் வருவார்.

**விடய உள்ளடக்கம்** : விழா (கட்டுரை)

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** :

- சுயகருத்துக்களைச் சிறுசிறு தொடர்களாகக் கூறுவார்.
- அவ்வாக்கியங்களை மேலும் நயம்படக் கூறுவதற்கு முன்வருவார்.
- இருவருக்கிடையில் கருத்துக்களை பண்புடன் பரிமாறிக்கொள்ள முன்வருவார்.
- தங்களது கருத்துக்கள், தகவல்களை நயம்படக் கூறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- குறைந்தளவு சொற்களைக் கொண்ட தொடர்களைக் கூற வழிப்படுத்துங்கள்.
- அந்த தொடர்களை மேலும் மெருகூட்டிக் கூறுவதற்கு இடமளியுங்கள்.
- மாணவர்களைச் சோடிகளாகப் பிரித்து, ஒருவர் மாறி ஒருவர் தொடர்களைக் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தங்களது கருத்துக்கள், தகவல்களை நயம்படக் கூறுவதற்கு ஊக்கப்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்

விழா - උත්සව

கொண்டாடுங்கள்- සමරන්න

வருக - එන්න

மக்கள் - ජනය

பங்குபற்றுங்கள் - සහභාගි වන්න

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

- எல்லோரும் வாருங்கள்.
- உற்சாகப்படுத்துங்கள்.
- எல்லோரும் பங்குபற்றுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

பாடநூல்கள், படங்கள், இறுவட்டு

**கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- தமது கருத்துக்களைத் தொடர்களாகக் கூறுவர்.
- அவ்வாக்கியங்களை மேலும் நயம்படக் கூறுவர்.
- தனது சகாக்களுடன் பண்பாகக் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வர்.
- தமது கருத்துக்களை நயம்படத் தெளிவாகக் கூறுவர்.

**தேர்ச்சி 3.0** : நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்றொடர்களில் உள்ள விடயங்களை கிரகித்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : கடிதங்களையும் வேறு படிவங்களையும் விளங்கி வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : நண்பர் ஒருவரின் கடிதம்

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** :

- கடிதங்களை இனங்கண்டு வாசிப்பார்.
- மௌனமாக வாசித்து வினாக்களுக்கு விடையளிப்பார்.
- பத்திரிகையில் வரும் தலைப்புச் செய்தியை வாசிப்பார்.
- வேறுபடிவங்களையும் விளங்கி வாசிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்**

- தலைப்பிற்குப் பொருத்தமான பாடத்தைத் தெரிவு செய்யுங்கள்.
- கடிதம் உள்ளடக்கப்பட்ட பாடப்பகுதியை வாசித்து கேட்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- கடிதம் எழுதும் போது பயன்படுத்தும் சொற்களை அறிந்து கொள்ளச் செய்யுங்கள்.
- எல்லா மாணவர்களையும் கடிதத்தை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- பத்திரிகையில் வரும் தலைப்புச்செய்தி போன்ற வேறு செய்திகளை வாசிப்பதற்கு வசதி செய்யுங்கள்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முகவரி | - ලිපිනය | கிடைத்த | - | ලැබුණු |
| பதில் | - පිළිතුර | வந்தால் | - | ආවොත් |
| எழுதுங்கள் | - ලියන්න | சுகம் | - | සනීප |
| இங்கே | - මෙහේ | உங்கள் | - | ඔබගේ |
| அனுப்புபவர் | - යවන්නා | எப்படி? | - | කොහොම ද? |

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**පුහුණුව සඳහා යොද ගන්න**

| | | |
|---|---|---|
| அன்புள்ள அப்பா<br>அன்பான அப்பா<br>அன்பு அப்பா | | ආදරණීය තාත්තා<br>ආදර තාත්තා |
| இப்படிக்கு<br>இங்ஙனம் | | මෙයට |
| என்றும் அன்புடன்<br>என்றும் பிரியமுடன் | | සැමදා සෙනෙහසින් |
| நலம் | - | සුවෙන් / සුවයි |
| நலமறிய ஆவல் | - | සුව දුක් දැනගන්න කැමතියි |
| நல்ல சுகம் | - | ඉතා සුවයි /සනීපයි |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

பாடநூல், மாதிரிக் கடிதம்

**கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- பத்திரிகையில் வரும் தலைப்புச் செய்திகளை வாசிப்பார்.
- கடிதங்களை வாசித்துக் காட்டுவார்.
- கடிதங்களை பொருள் விளங்கி வாசிப்பார்.
- பாடநூலில் உள்ள கடிதங்களை வாசிப்பார்.
- படிவங்களை பொருள் விளங்கி வாசிப்பார்.
- பத்திரிகையில் வரும் தலைப்புச் செய்திகளை வாசிப்பார்.
- வேறு கடிதங்களை ஆர்வத்துடன் வாசிப்பார்.

**தேர்ச்சி 3.0** : நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்றொடர்களில் உள்ள விடயங்களை கிரகித்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : இலக்கியங்களை விளங்கி வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : நான் விரும்பும் பெரியார்

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** :

- பாடப்பகுதியை வாசிப்பார்.
- பாடப் பகுதியை வாசித்து பொருளை விளங்கிக் கொள்வார்.
- பாடப்பகுதியில் உள்ள சொற்களின் கருத்தைத் தெரிந்து கூறுவார்.
- பாடப்பகுதியில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை கூறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- பாடப்பகுதியை தெளிவாக வாசித்துக் காட்டுங்கள்.
- பாடப்பகுதியில் உள்ள சொற்களின் கருத்தை அறிந்துகொள்ளச் செய்யுங்கள்.
- எல்லா மாணவர்களுக்கும் பாடப்பகுதியை வாசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடப்பகுதியின் பொருளை அறிந்துகொள்ளச் செய்யுங்கள்.
- பாடப்பகுதியில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்க ஊக்குவியுங்கள்.

## முதன்மைப் பதங்கள்/ எண்ணக்கருக்கள்

| | | | |
|---|---|---|---|
| தமிழ் - | දෙමළ/තමිළ් | பாலபோதினி - | පාලපෝදිනි |
| சைவம் - | සෛවම් | நாடு - | රට |
| அச்சு இயந்திரம் - | මුද්‍රණ යන්ත්‍රය | கோயில் - | කෝවිල |
| பணி - | සේවය | வாழ்ந்தார் - | ජීවත්විය |
| பைபிள் - | බයිබලය | மொழிபெயர்ப்பு - | පරිවර්තනය |

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**පුහුණුව සඳහා යොදා ගන්න**

பதிப்பு - මුද්‍රණය

அச்சு இயந்திரம் - මුද්‍රණ ලියනය

பாடநூல் - පෙළ පොත

மொழிபெயர்ப்பு - පරිවර්තනය

இலக்கணம் - ව්‍යාකරණ

இலக்கியம் - සාහිත්‍යය

தமிழ்ப் பணி - දෙමළ/තමිළ් බසට කළ සේවය

இயற்றினார் - රචනා කළේය

பிறந்தார் - ඉපදුනේය வாழ்ந்தார் - ජීවත්විය

**தரவிருத்தி உள்ளீடுகள்**

பாடநூல்

**கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- பாடப்பகுதியை வாசித்துக் காட்டுவார்.
- பாடப்பகுதியை பொருள் விளங்கி வாசிப்பார்.
- பாடப்பகுதியில் உள்ள சொற்களின் கருத்தைக் கூறுவார்.
- பாடப்பகுதியில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிப்பார்.

**தேர்ச்சி 3.0** : நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்றொடர்களில் உள்ள விடயங்களை கிரகித்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : அறிவுறுத்தல்களை விளங்கி வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தெளிவான அறிவுறுத்தல்களை விளங்கி வாசித்துத் துலங்குதல்
- வழிபாட்டுத் தலத்திலுள்ள அறிவுறுத்தல்கள்

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** :

- வழிபாட்டுத்தலத்திலுள்ள அறிவுறுத்தல்களை வாசிப்பார்.
- அறிவுறுத்தல்களை வாசித்துப் பொருளை விளங்கிக் கூறுவார்.
- அறிவுறுத்தல்களை வாசித்துப் பொருள் விளங்கித் துலங்குவார்.
- வேறு அறிவுறுத்தல்களை வாசிப்பதற்கு ஆர்வத்தை வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்**

- வழிபாட்டுத் தலத்தில் காணப்படும் அறிவுறுத்தல்களை காட்சிப்படுத்துங்கள்.
- அறிவுறுத்தல்களை வாசித்துக்காட்டுங்கள்.
- எல்லா மாணவர்களும் அறிவுறுத்தல்களை வாசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிவுறுத்தல்களை வாசித்து அதற்கேற்ப துலங்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் ஒருவருக்கொருவர் அறிவுறுத்தல்களைக் கூறுவதற்கு வழிகாட்டுங்கள்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செருப்பு | - | සෙරෙප්පුව | கழற்றவும் | - | ගලවන්න |
| அங்கே | - | එහේ | சத்தம் | - | ශබ්දය |
| வெளியே | - | පිටත/එළියේ | இங்கே | - | මෙහේ |
| பாதணிகள் | - | පාවහන් | போட வேண்டாம் | - | දාන්න එපා |
| மணியோசை | - | සීනු නාදය | கற்பூரம் | - | කපුරු |
| கொளுத்த வேண்டாம் | - | නොදල්වන්න | பூசை | - | පූජාව |

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**පුහුණුව සඳහා යොදා ගන්න**

பாதணிகள் இன்றி உட்பிரவேசிக்கவும் - පාවහන් නොමැතිව ඇතුළු වන්න

ஆண்கள் - පිරිමි

பெண்கள் - ගැහැණු

பூசைச் சாமான் - පූජා භාන්ඩ

அர்ச்சனை – පූජාව

கற்பூரம் - කපුරු

வரிசையாக வரவும் - පේළියට එන්න

சிலைகளைத் தொடாதீர்கள் - පිළිම අල්ලන්න එපා

அமைதியாக இருங்கள் - නිශ්ශබ්ද වන්න

**தரவிருத்தி உள்ளீடுகள்**

பாடநூல், அறிவுறுத்தல் அடங்கிய சொல்லட்டைகள்

**கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- வழிபாட்டுத் தலத்திலுள்ள அறிவுறுத்தல்களை வாசிப்பார்.
- அறிவுறுத்தல்களை பொருள் விளங்கி வாசிப்பார்.
- அறிவுறுத்தல்களை வாசித்து பொருள் விளங்கி அதற்கேற்ப துலங்குவார்.
- வேறு அறிவுறுத்தல்களை வாசிப்பார்.

**தேர்ச்சி 3.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்றொடர்களில் உள்ள விடயங்களை கிரகித்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : கட்புல செவிப்புல சாதனங்களின் மூலம் தகவல்களைப் பார்த்து விளங்கி வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தமிழ்ப் பத்திரிகையில் இடம்பெறும் விளையாட்டுச் செய்திகள்

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** :

- பத்திரிகையில் வரும் விளையாட்டுச் செய்திகளை இரசித்து வாசிப்பார்.
- செய்திகளில் வரும் சொற்களின் கருத்தை அறிந்து கொள்வார்.
- வெவ்வேறு ஊடகத் தகவல்களைப் பார்த்து விளங்கி வாசிப்பார்.
- பாடநூல்களில் வரும் கதையினை வாசிக்க ஆர்வத்தை வெளிப்படுத்துவார்.
- வேறு ஊடகத் தகவல்களை வாசிப்பதற்கு ஆர்வத்தை வெளிப்படுத்துவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- பத்திரிகையில் வரும் வெவ்வேறு விளையாட்டுச் செய்திகளைக் காட்சிப்படுத்துங்கள்.
- செய்திகளை வாசித்துக் காட்டுங்கள்.
- செய்திகளில் வரும் சொற்களின் பொருளை அறிந்து கொள்ள உதவுங்கள்.
- செய்திகளை வாசிப்பதற்கு அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடநூல்களில் வரும் கதைகளை வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வேறு ஊடகத் தகவல்களை வாசிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுங்கள்.

## முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கிரிக்கெட் | - | ක්‍රිකට් | அடித்தார் | - | ගැසුවා |
| பிடித்தார் | - | ඇල්లුවා | மட்டை | - | පිත්ත |
| தூக்கி | - | ඔසවා | உருண்டு | - | පෙරළී |
| எல்லை | - | සීමාව | வீசினார் | - | විසිකලා |
| வேகமாக | - | වේගයෙන් | துடுப்பாட்டம் | - | පිතිකරනය |
| தலைக்கவசம் | - | හිස් වැසුම | தாண்டியது | - | පසුවිය |

### பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

### පුහුණුව සඳහා යොදා ගන්න

| | | |
|---|---|---|
| வேகமாக அடித்தார் | - | වේගයෙන් ගැසුවේය |
| திறமையாகப் பிடித்தார் | - | දක්ෂලෙෂ ඇල්ලූවේය |
| மெதுவாக ஓடினார் | - | සෙමින් දිව්වේය |
| உயரமாக வீசினார் | - | උසට වීසි කළේය |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விழுந்தார் | - | වැටුනේය | பாய்ந்தார் | - | පැන්නේය |
| கவனமாக | - | ප්‍රවේශමෙන් | உற்சாகமாக | - | උත්සාහයෙන් |

## தரவிருத்தி உள்ளீடுகள்

பத்திரிகையில் வெட்டியெடுத்த விளையாட்டுச் செய்திகள்
பாடநூல்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- விளையாட்டுச் செய்திகளை இரசித்து வாசிப்பார்.
- செய்திகளில் வரும் சொற்களின் கருத்தை அறிந்து கூறுவார்.
- பாடநூலிலுள்ள கதையை விளங்கி வாசிப்பார்.
- வேறு கட்புல செவிப்புல ஊடகத் தகவல்களை விளங்கி வாசிப்பார்.

**தேர்ச்சி 4.0** : நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான அறிமுகமற்ற சொற்கள் சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : விபரங்கள் உள்ளடங்கிய பந்திகளை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : நான் விரும்பும் பெரியார்

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- தரவுகளை ஒழுங்கமைத்து வாக்கியம் ஆக்குவார்.
- சுயமாக ஆக்கங்கள் எழுதுவார்.
- வாக்கியங்களை வாக்கிய இயைபுகளுக்கேற்ப வழுவின்றி எழுதுவார்.
- **நான் விரும்பும் பெரியார்** எனும் தலைப்பில் வாக்கியங்களை எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- பின்னிணைப்பில் உள்ள சுவாமி விபுலானந்தர் என்னும் தலைப்பின் கீழ் உள்ள வாக்கியங்களை காட்சிப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
- ஏனைய பெரியார்களைப் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- வாக்கிய அமைப்புக் குறித்து மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- பொருத்தமான எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் அமைய வாக்கியம் எழுத வழிப்படுத்துங்கள்.
- நான் விரும்பும் பெரியார் எனும் தலைப்பின் கீழ் வாக்கியங்களை எழுதுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

## முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புலவர் | - | කවියා | காலை | - | උදෑසන |
| நூல் | - | පොත | வருவார் | - | එයි |
| வாழ்ந்தார் | - | ජීවත් වුනා | மாலை | - | සවස |
| இந்து | - | හින්දු | ஆசிரியர் | - | ගුරුතුමා |
| மொழி | - | භාෂාව | உரையாற்ற | - | කතා පවත්වන්න |
| பொறுமை | - | ඉවසීම | பணி | - | සේවය |

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**පුහුණුව සඳහා යොද ගන්න -**

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார். - යාපනයේ ජීවත් වුනේය.

மொழிபெயர்ப்புச் செய்தார். - භාෂා පරිවර්තන කළේය.

சைவசமயத்தை வளர்த்தார். - හින්දු ධර්මයට සේවය කළේය.

தமிழ்மொழிக்குப் பணியாற்றினார்.- දෙමළ භාෂාවට සේවය කළේය.

**சுவாமி விபுலானந்தர்**

- இலங்கையில் உள்ள தமிழறிஞர்களுள் சுவாமி விபுலானந்தரும் ஒருவராவார்.
- இவர் காரைத்தீவில் 1892 ஆம் ஆண்டில் பிறந்தார்.
- இவருடைய தந்தையின் பெயர் சாமித்தம்பி.
- சுவாமி விபுலானந்தரின் தாயாரின் பெயர் கண்ணம்மை.
- இவர் துறவு வாழ்வை மேற்கொண்டார்.
- சுவாமி விபுலானந்தர் இலங்கையின் முதல் தமிழ் பேராசிரியராக பணியாற்றியுள்ளார்.
- மேலும் சுவாமி விபுலானந்தர் இந்தியாவின் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் பணி புரிந்துள்ளார்.
- சுவாமி விபுலானந்தர் கல்விக்கும் கலை வளர்ச்சிக்கும் அரிய பல சேவைகள் ஆற்றியுள்ளார்.
- இவர் யாழ் நூல் என்னும் இலக்கியத்தைப் படைத்துள்ளார்.
- சுவாமி விபுலானந்தர் முத்தமிழ் அறிஞர் எனப் போற்றப்படுகிறார்.
- இவரது நினைவாகவே இலங்கையில் தேசிய தமிழ் மொழித்தினம் கொண்டாடப்படுகிறது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

சுவரொட்டி

பாடநூல்

**கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- நான் விரும்பும் பெரியார் எனும் தலைப்பில் வாக்கியங்கள் எழுதுவார்.
- வாக்கியங்களை வழுவின்றி எழுதுவார்.
- கொடுக்கப்படும் தலைப்பின் கீழ் வாக்கியம் எழுதுவார்.
- பெரியோர்களை மதித்து நடப்பார்.

**தேர்ச்சி 4.0** : நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான அறிமுகமற்ற சொற்கள் சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : ஆக்கபூர்வமான பந்திகளை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : நான் சென்ற சுற்றுலா

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- பார்த்துக் கிரகித்த விடயங்களைச் சிறு சிறு வாக்கியங்களாக எழுதுவார்.
- இரசித்த விடயங்களை அடைமொழிகள் சேர்த்து அழகுற எழுதுவார்.
- அழைப்பிதழில் உள்ளடக்க வேண்டிய விடயங்களைக் குறிப்பிட்டு எழுதுவார்.
- அழைப்பிதழ் ஒன்றை முறையாக எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- நான் சென்ற சுற்றுலா கட்டுரை ஒன்றை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதில் வரும் முதன்மைப் பதங்களைக் குறித்துக்கொள்ள வழிப்படுத்துங்கள்.
- அப்பதங்களைக் கொண்டு சிறு வாக்கியங்களை அமைக்க துணைபுரியுங்கள்.
- எழுதிய வாக்கியங்களை இயைபுடன் ஒன்றிணைத்துச் சிறு பந்தி அமைக்க உதவுங்கள்.
- மாதிரி அழைப்பிதழ் ஒன்றைக் காட்சிப்படுத்தி அதில் உள்ளடங்கிய விடயங்களை எடுத்துக் காட்டுங்கள்.
- அழைப்பிதழ் ஒன்றை எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அறிவுரை | - | උපදෙස් | அதிசயித்து | - | පුදුම වී |
| பூங்கா | - | මල් වත්ත | புறப்பட்டோம் | - | පිටත් වුනා |
| கவர்ந்தன | - | සිත්ගත්තා | அரும்பொருட்சாலை | - | කෞතුකාගාරය |
| அழகான | - | ලස්සන | சரணாலயம் | - | අභය භූමිය |
| பல்கலைக்கழகம் | - | විශ්ව විද්‍යාලය | மிருகக்காட்சிச் சாலை | - | සත්තු වත්ත |
| நீர்த்தேக்கம் | - | ජලාශය | துறைமுகம் | - | වරාය |
| கோள்மண்டல கூடம் | - | ග්‍රහලෝකාගාරය | விலங்குகள் | - | සත්තු |

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.
## පුහුණුව සඳහා යොදා ගන්න

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புறப்பட்டோம் | - | පිටත් වුනෙමු | அழகான | - | ලස්සන |
| சென்றோம் | - | ගියෙමු | உயரமான | - | උස |
| பார்த்தோம் | - | බැලුවෙමු | நீளமான | - | දිග |
| கண்டோம் | - | දුටුවෙමු | இயற்கையான | - | ස්වභාවික |
| இரசித்தோம் | - | රසවින්දෙමු | பழைமையான | - | පැරණි |
| ஏறினோம் | - | නැග්ගෙමු | நவீன | - | නවීන/නූතන |
| இறங்கினோம் | - | බැස්සෙමු | புதிய | - | අලුත් |
| வந்தோம் | - | ආවෙමු | சிறிய | - | කුඩා |

## தரவிருத்தி உள்ளீடுகள்

காட்சிப்படங்கள், பாடநூல், இலங்கையில் உள்ள சுற்றுலாத் தலங்களின் படங்கள்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- தாங்கள் சென்ற சுற்றுலா பற்றி ஆர்வத்தோடு கலந்துரையாடுவார்.
- தாங்கள் பெற்றுக்கொண்ட முதன்மைப் பதங்களைக் கொண்டு சிறு வாக்கியங்களை எழுதுவார்.
- சிறு வாக்கியங்களைக் கொண்டு முறையாகப் பந்தியாக எழுதுவார்.
- அழைப்பிதழில் உள்ள விடயங்களை அறிந்து பட்டியற்படுத்தி எழுதுவார்.
- மாதிரி அழைப்பிதழ் ஒன்றை எழுதுவார்.

**தேர்ச்சி 4.0** : நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான அறிமுகமற்ற சொற்கள் சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : கடிதங்களை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : வெளிநாட்டிலுள்ள சகோதரனுக்குச் சிறிய கடிதம் (உறவுமுறை)

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** :

- ஆரம்பகால தகவல் தொடர்புகள் பற்றி அறிந்து எழுதுவார்.
- தற்காலத் தகவல் தொடர்புகள் பற்றி விளங்கி எழுதுவார்.
- கடிதத்தின் உறுப்புகளை இனங்கண்டு குறித்துக்கொள்வார்.
- உறவுமுறைக் கடிதத்தின் உறுப்புகளை விளங்கி நண்பனுக்கு அல்லது நண்பிக்குக் கடிதம் எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- ஆரம்பகாலத் தொடர்பாடல் கருவிகளைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
- தற்காலத் தகவல் தொடர்பாடல் குறித்து மாணவர்களுடன் வினாக்கள் தொடுத்துக் கலந்துரையாடுங்கள்.
- கடித வகைகள், அதன் உறுப்புகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக்கொள்ள உதவுங்கள்.
- உறவுமுறைக் கடிதம் எழுதும் முறையைப் பின்பற்றிக் கடிதம் எழுத வழிப்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முகவரி | - | ලිපිනය | நண்பன் | - | මිතුරා |
| நலம் | - | හොඳින් | உள்ளடக்கம் | - | අන්තර්ගතය |
| கடித உறை | - | ලිපි කවරය | எப்படி? | - | කොහොම ද? |
| முத்திரை | - | මුද්දරය | தலைப்பு | - | මාතෘකාව |
| திகதி | - | දිනය | விடயம் | - | කරුණු |

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**පුහුණුව සඳහා යොදා ගන්න**

| | | | |
|---|---|---|---|
| திருவிழா - | කෝවිල් උත්සව | கொண்டாட்டம்- | උත්සව |
| பண்டிகை - | උත්සව | பரீட்சை - | විභාගය |
| மழை - | වැස්ස | வெய்யில் - | අව්ව |
| சூடு - | රශ්නය | குளிர் - | සීතල |
| கோடை - | ඉඩෝරය | வசந்தகாலம் - | වසන්තය |
| படிக்கும்போது - | ඉගෙන ගන්නා විට | போகும்போது - | යන විට |
| வரும்போது - | පැමිණෙන විට | தேடும்போது - | හොයන විට |
| பார்க்கும்போது- | බලන විට | பேசும்போது - | කතාකරන විට |
| சாப்பிடும்போது - | කන විට | எழுதும்போது - | ලියන විට |
| குடிக்கும்போது - | පානයකරන විට | இருக்கும்போது - | සිටිනවිට |

**மாதிரிக் கடிதம்**

கண்டி வீதி,

வலப்பனை,

2015.09.24

அன்புள்ள அண்ணா,

நான் நலம். நலம் அறிய ஆவல். உங்கள் கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. வீட்டில் எல்லோரும் சுகமாக உள்ளார்கள். நான் நன்றாகப் படிக்கிறேன். நீங்கள் எப்போது இங்கு வருவீர்கள்? வரும்போது எனக்கு கணினி ஒன்று வாங்கி வாருங்கள். கடிதம் கிடைத்தவுடன் எனக்கு மறக்காமல் பதில் அனுப்புங்கள். உங்கள் பதிலை நான் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு

உங்கள் அன்புத் தம்பி,

வசந்தன்

## தரவிருத்தி உள்ளீடுகள்

மாதிரிக் கடிதம், பாடநூல், தொடர்பாடல் சாதனங்கள் (படங்கள்) சொல்லட்டைகள்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- தொடர்பாடல் என்பதை விளங்கிக் கூறுவார்.
- தொடர்பு சாதனங்களை இனங்கண்டு பெயரிடுவார்.
- உறவுமுறைக் கடித உறுப்புகளைக் கையாண்டு நண்பனுக்கு கடிதம் எழுதுவார்.
- அன்றாடத் தேவைகளுக்காக கடிதம் எழுதுவார்.

**தேர்ச்சி 4.0** : நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான அறிமுகமற்ற சொற்கள் சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.4** : தகவல்கள் உள்ளடங்கிய சொற்றொடர்களை / பந்திகளை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : குப்பைகளை அகற்றுவது தொடர்பான அறிவித்தல்கள், துண்டுப் பிரசுரம்.

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** :

- கருத்துக்களை வெளிப்படுத்தும் சிறு வாக்கியங்களை எழுதுவார்.
- தகவல்களை வெளிப்படுத்தும் சொற்களைக் குறித்து எழுதிக்கொள்வார்.
- மாதிரித் துண்டுப் பிரசுரமொன்றை ஆக்கி எழுதுவார்.
- குறித்த தகவல்களைப் பெற்றுக்கொண்டு மாதிரி அறிவித்தல் ஒன்றை எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்

- மாதிரித் துண்டுப் பிரசுரமொன்றையும் அறிவுறுத்தல் ஒன்றையும் காட்சிப்படுத்துங்கள்.
- இதில் வரும் முதன்மைப் பதங்கள், குறிப்பான சொற்களைக் குறித்துக்கொள்ள வழிப்படுத்துங்கள்.
- அச்சொற்களைக் கொண்டு பொருள் விளங்க வாக்கியம் அமைக்க வழிகாட்டுங்கள்.
- மாதிரித் துண்டுப் பிரசுரம் ஒன்றை எழுத வழிப்படுத்துங்கள்.
- மாதிரி அறிவுறுத்தல் ஒன்றை எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள்/ எண்ணக்கருக்கள்**

| | | | |
|---|---|---|---|
| முகவரி - | ලිපිනය | நோய் - | රෝගය |
| நலம் - | හොඳින් /සුවයි | உள்ளடக்கம் - | අන්තර්ගතය |
| தகவல் தருபவர்- | තොරතුරු සපයන්නා | சுகாதாரம் - | සෞඛ්‍යය |
| சுத்தம் - | පිරිසුදු | விளிப்பு - | ආමන්ත්‍රණය |
| பரவும் - | පැතිරෙයි | தலைப்பு - | මාතෘකාව |
| திகதி - | දිනය | விடயம் - | කරුණු |
| உக்கும் - | දිරයි | மருந்து - | බෙහෙත් |

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**පුහුණුව සඳහා යොදා ගන්න**

டெங்கு பரவுவதை ஒழிப்போம்.

ඩෙංගු රෝගය පැතිරියාම වලක්වමු.

புகைத்தல் தடை

දුම්බීම තහනම්.

புகைத்தல் புற்று நோய்க்கு வழிவகுக்கும்.

දුම්බීම පිළිකා ඇති කරයි.

சூழலைச் சுத்திகரிப்போம்.

පරිසරය පිරිසිදු කරමු

கொதித்தாறிய நீரைக் குடியுங்கள்.

උතුරවා නිවාගත් ජලය පානය කරන්න

**தரவிருத்தி உள்ளீடுகள்**

மாதிரிக் கடிதம், பாடநூல்

**கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- துண்டுப் பிரசுரத்திற்கும் அறிவுறுத்தல்களுக்கும் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுப்பார்.
- அச்சொற்களைப் பயன்படுத்தி கருத்துள்ள வாக்கியங்களை ஆக்குவார்.
- மாதிரித் துண்டுப் பிரசுரமொன்றை ஆக்கி எழுதுவார்.
- பொருத்தமான தகவல்களைப் பெற்றுக்கொண்டு மாதிரி அறிவித்தல் ஒன்றை எழுதுவார்.

**தேர்ச்சி 4.0** : நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான அறிமுகமற்ற சொற்கள் சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.5** : விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்** : பயிற்சி நெறி ஒன்றிற்கான விண்ணப்பப் படிவம்

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** :

- அன்றாடம் பயன்படுத்தப்படும் விண்ணப்பப் படிவங்களைப் பற்றி கலந்துரையாடிக் கூறுவார்.
- விண்ணப்பப் படிவங்களை வாசித்துக் கிரகித்துத் தேவையான தரவுகளைப் பட்டியற்படுத்திக் கூறுவார்.
- விண்ணப்பப் படிவங்களை முறையாகப் பூர்த்தி செய்து காட்சிப்படுத்துவார்.
- பயிற்சி நெறி ஒன்றிற்கான விண்ணப்பப் படிவத்தை முறையாகப் பூரணப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்**

- பல்வேறுவகையான விண்ணப்பப் படிவங்களை காட்சிப்படுத்திக் கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.
- விண்ணப்பப் படிவம் ஒன்றை பூரணப்படுத்துவதற்குத் தேவையான தரவுகளைப் பட்டியற்படுத்த சந்தர்ப்பம் அளியுங்கள்.
- விண்ணப்பப் படிவத்தை வழங்கி, அவற்றை முறையாகப் பூரணப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.
- பயிற்சி நெறி ஒன்றிற்கான விண்ணப்பப் படிவத்தை வழங்கி, அதனை முறையாகப் பூரணப்படுத்த உதவுங்கள்.

**முதன்மைப் பதங்கள்/ எண்ணக்கருக்கள்**

விண்ணப்பப் படிவம் - ඉල්ලුම් පත්‍ර

தொழில் - රැකියාව

வயது - වයස

வதிவிடம் - පදිංචි ස්ථාන

முழுப்பெயர்- සම්පූර්ණ නම

கல்வித் தகைமை – අධ්‍යාපන සුදුසුකම්

தந்தை பெயர்- පියාගේ නම

விலாசம் - ලිපිනය

சித்தி பெற்ற பாடங்கள் - සමත්වූ විෂය

**தரவிருத்தி உள்ளீடுகள்**

பாடநூல், மாதிரி விண்ணப்பப் படிவம்

**கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- விண்ணப்பப் படிவத்தை வாசித்துக் கிரகித்துக் கூறுவர்.
- விண்ணப்பப் படிவங்களை முறையாகப் பூரணப்படுத்தி, அவற்றைக் காட்சிப்படுத்துவர்.
- பயிற்சி நெறிக்கான விண்ணப்பப் படிவத்தை முறையாகப் பூரணப்படுத்தி, எழுதிக் காட்டுவர்.